# DEPOSITION OF WITNESS

**Crl.Misc.39**
**(CHAPTER XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM**

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW3

| | | | |
|---|---|---|---|
| Name : | அப்புகுட்டி | Caste : | |
| S/o.W/o.D/o. : | சின்னப்பன் | Calling : | |
| Village : | | Religion : | |
| Taluk : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 14.3.2024.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் வைகுந்தம் கிராமம், காளிப்பட்டி பிரிவு ரோட்டில் குடியிருக்கிறேன். நான் சைக்கிள் ஸ்டேண்ட் வைத்துள்ளேன். வழக்கில் இறந்துபோன சின்னுசாமியை தெரியும். அவர் நான் குடியிருக்கும் வீடடிற்கு பக்கத்தில் குடியிருக்கிறார். சின்னுசாமி ரேடியோ ரிப்பேர் செய்வது நியூஸ் பேப்பர் போடும் வேலை செய்து வந்தார். சுமார் 10 வருடத்திற்கு முன்னர் அவரது மனைவி இறந்துவிட்டார்.

சின்னுசாமிக்கு 2 மகன்கள். ஒருவர் பெயர் சந்திரசேகர். மற்றொருவர் பெயர் ரமேஷ். ஆஜர் 1வது எதிரிதான் சந்திரசேகர். மற்ற எதிரிகளை எனக்குத் தெரியாது. இதற்கு முன்பு நான் அவர்களை பார்த்ததில்லை. ரமேஷ் கார் கம்பெனிக்கு வேலைக்கு சென்றுவந்தார். 1வது எதிரி சந்திரசேகர் தறிக்கு கூலி வேலைக்கு சென்றுவந்தார். 1வது எதிரிக்கு திருமணம் ஆகி ஒரு பெண் குழந்தை உள்ளது. ஆஜர் 1வது எதிரி சின்னுசாமியின் வீட்டில் ஒரு பகுதியில் குடியிருந்து வந்தார். எதிரி சந்திரசேகர் மற்றும் சின்னுசாமியும் ஒற்றுமையாகதான் இருந்தார்கள். சுமார் 5,6 வருடங்களுக்கு முன்னர் இரவு 10.00 மணி அளவில் நான் என்னுடைய சைக்கிள் ஸ்டேண்டில் இருந்தபோது சின்னுசாமி இறந்துவிட்டார் என்பதை பார்ப்பதற்காக மக்கள் சென்று வந்தார்கள். பிறகு நான் போய் பார்த்தேன். சின்னுசாமி இறந்துகிடந்தார். அவர் எப்படி இறந்தார் என்று தெரியாது. ஒவ்வொருவரும் ஒரு மாதிரி பேசிக்கொண்டார்கள். மாரடைப்பு மாதிரி வந்து இறந்துவிட்டதாக சிலர் பேசிக்கொண்டார்கள். சிலர் அவரை அடித்து கொன்றுவிட்டதாக பேசிக்கொண்டார்கள். சிலர் அவரது பெரிய மகன் அடித்து கொன்றுவிட்டதாக பேசிக்கொண்டார்கள். எனக்கு நேரடியாக என்ன நடந்தது என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசாரிடமும் சின்னுசாமி எப்படி இறந்தார் என்று தெரியாது என்று சொன்னேன்.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர்

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது 1வது எதிரி சந்திரசேகர் அவரது அப்பா சின்னுசாமியிடம் நிலத்தை விற்று பணம் தருமாறு அடிக்கடி தகராறு செய்து வந்தார் என்றும், 18.5.2018 ம் தேதி இரவு 10.00 மணி சுமாருக்கு சின்னுசாமியின் இளைய மகன் ரமேஷ் வீட்டிற்கு வந்து சத்தம் போட்டார், நானும் அக்கம் பக்கம் இருந்தவர்களும் செனறு பார்த்தபோது சின்னுசாமியின் மூக்கின் மேல் ரத்தம் வந்தும், கழுத்தில் கன்றிய காயமும் ஏற்பட்டு வீட்டில் இறந்துபோய் கிடந்தார் என்றும், அப்போது அங்கு வந்த பொன்னுசாமி என்பவர் நேற்று மாலை 3.00 மணி சுமாருக்கு சின்னுசாமியின் வீட்டிற்கு தென்னை மட்டை வெட்ட வந்தபோது சின்னுசாமியின் மூத்த மகன் சந்திரசேகரும் அவருடன் 2 பேரும் வீட்டிற்கு வந்துவிட்டு ஒரே வண்டியில் 3 பேரும் சென்றதாகவும், வீட்டில் அலறல் சத்தம் கேட்டதாக சொன்னார் என்றும் 2 பேருடன் வந்த சந்திரசேகர் சொத்திற்காக அவரது அப்பாவை கழுத்தை இறுக்கி கொலை செய்துவிட்டு சென்றுவிட்டார் என்று ஆய்வாளர் விசாரரித்தபோது சொன்னேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் என்னை மிரட்டியால் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.